மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண்.22/2021

பெயர் – குருபஞ்சாபகேசவன் (வா.சா.2)

நாள் – 03.11.2023

பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

நான் இந்தவழக்கின் 2ம் வாதி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி முதல் விசாரணைக்கு ஆஜராகி குறுக்குவிசாரணைக்கு ஆஜராகவில்லை என்றால் சரிதான். அந்த காரணத்தை என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் அவரை மோசடியாக பயன்படுத்தியுள்ளதால் அவர் இந்த வழக்கில் ஆஜராகவில்லை என்றால் சரியல்ல. நான் 1ம் வாதிக்கு தபசில் 3வது அயிட்ட சொத்தை கிரையம் ே◌கொடுத்ததற்கு சரியான பிரதிபிரயோஜனம் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் எந்த பணமும் பெறவில்லை. எந்த பணமும் பெற்றுக்கொள்ளாமல் நான் 1ம் வாதிக்கு கிரையம் கொடுத்தேனா என்றால் எனக்கு உடல் நிலை சரியில்லாத காணரத்தினால் அந்த சொத்தில் தொழிற்சாலையில் 1ம் வாதி பங்குதாரராக நியமித்து அதற்காக அந்த 10 சென்ட் எனது மூதாதையரின் சொத்தை பெயர் அளவிற்கு அவருக்கு கிரையம் செய்து கொடுத்தேன். ஆனால் அனுபவம் என்வசம் தான் உள்ளது. பிரதிவாதிகளை 1ம் வாதியை வைத்து மிரட்டி தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதால் நான் 1ம் வாதிக்கு தபசில் சொத்தை கிரையம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. தபசில் 3 சொத்துக்களையும் 29.3.2021ம் தேதியில் நானும், எனது தகப்பனாரும் சேர்ந்து விஜயகரிசல்குளத்தை சேர்ந்த பரமசாமிதேவர் மகன் முனியசாமிக்கு கிரையம் செய்து கொடுத்தோம் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணங்கள் தான் அந்த கிரைய ஆவணம் என்றால் சரிதான். 29.3.2021ம் தேதியிட்ட ஆவண எண்.2990/2021 பி.வா.சா.ஆ.1 ஆகும். 29.3.2021ம் தேதியிட்ட ஆவண எண்.2991/2021 பி.வா.சா.ஆ.2 ஆகும். முனியசாமிக்கு 3வது அயிட்ட சொத்தை நான் எனது பங்கை கொடுத்து எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.5 ஆவணத்தை ரத்து செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.5 ஆவணத்தை ரத்து செய்யாமால் முனியாசமிக்கு பி.வா.சா.ஆ.1மூலம் கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தை ரத்து செய்யாமல் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை முனியசாமிக்கு பிறப்பித்து கொடுப்பதற்கு எனக்கு உரிமை உள்ளதா

என்றால் உள்ளது. முனியசாமிக்கு நான் கொடுத்த கிரையபத்திரத்திற்கு நான் பணம் கொடுத்துள்ளேனா என்றால் பணம் கொடுத்துள்ளேன். தாவா 3 வது அயிட்ட சொத்தை 3 நான் வெள்ளத்தாய் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். அந்த கிரையத்தை பொறுத்து இதே நீதிமன்றத்தில் அ.வ. எண்.56/2009 வழக்கை தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கை மேல்நடத்தாமல் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் தீர்ப்பு தான் அ.வ.56/2009 க்கான தீர்ப்பு சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.3 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் தீர்ப்பபாணை தான் அ.வ.56/2009 க்கான தீர்ப்பாணை சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.4 ஆகும். பி.வா.சா.ஆ.3 மற்றும் 4 ஆன தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் படி 3 வது அயிட்ட சொத்து எனக்கு பாத்தியப்பட்டதல்ல என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை நான் உதாசீனம் செய்து விட்டு முனியசாமிக்கும், 1ம் வாதி முத்துப்பாண்டிக்கும் நான் கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தை பிரதிவாதிகளிடம் இருந்து அபகரிக்க வேண்டும் என்பதற்காக அக்கிரமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.846/1 ஏ 2 பி—ல் தபசில் 3 வது அயிட்ட சொத்துக்களும் உள்ளது என்றால் சரிதான். அந்த மொத்த விஸ்தீர்ணம் 2 ஏக்கர் 10 சென்ட் என்றால் சரிதான். எனது தகப்பனார் ஜெயகுருநாதன் என்பவர் 1ம் பிரதிவாதி சித்தப்பா சின்னவெள்ளைசாமி மற்றும் பெருமாள்சாமி ஆகியோர்களுக்கு சர்வேஎண்.846/1 ஏ 2 பியில் உள்ள 2 ஏக்கர் 10 சென்ட்டின் வடபுறம் 1 ஏக்கர் 40 சென்ட்டை பரிவர்த்தனை பத்திரம் மூலம் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனவே 2 ஏக்கர் 10 சென்ட் சர்வேஎண்.846/1 ஏ 2 பி 1 ஏக்கர் 40 சென்ட் தான் பாத்தியம் என்றால் சரிதான். 1 ஏக்கர் 40 சென்ட்க்கு தெற்குபுறம் உள்ள 70 சென்ட் நிலம் 1ம் பிரதிவாதிக்கும், அவரது சகோதரருக்கும் பாத்தியம் என்றால் அதுபற்றி எனது தகப்பனாருக்குதான் தெரியும். இந்த வழக்கில் எனது தகப்பனாரை விசாரிக்க உள்ளேனா என்றால் இல்லை. எனது தகப்பனார் ஒரு ஏக்கர் 40 சென்ட் கிரையம் பெற்றுவிட்டு 2 ஏக்கர் 10 சென்ட்க்கு தனது பெயருக்கு பட்டா மாற்றிவிட்டதால் என்றால் சரிதான். அனுபவத்தில் இருந்ததால் மாற்றினோம். 1ம் பிரதிவாதி பெருமாள்சாமி பட்டா மாற்றம் குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின்

கீழ் அறிக்கை பெற்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் வடபுறத்தில் கிரையம் 1 ஏக்கர் 40 சென்ட் நிலத்தில் 1 ஏக்கர் 30 சென்ட் நிலத்தை எனக்கு 22.02.2008 ம் தேதியிட்ட ஆவணம் மூலம் தானசெட்டில்பத்திரமூலம் பாத்தியப்படுத்தி கொடுத்தார் என்றால் சரிதான். 22.02.2008 ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் பி.வா.சா.ஆ.5 ஆகும். 24.3.2008 ம் தேதியில் அதில் வடபுறத்தில் மீதம் உள்ள 10 சென்ட் நிலத்தையும் எனக்கு தானசெட்டில்மெண்ட்மூலம் எனது தகப்பனார் பாத்தியப்படுத்தி கொடுத்தார் என்றால் சரிதான். 24.03.2008 ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் பி.வா.சா.ஆ.6 ஆகும். எனவே எனது தகப்பனார் பெற்ற 1 ஏக்கர் 40 சென்ட் நிலத்தையும் எனக்கு பி.வா.சா.ஆ.5 மற்றும் 6 ஆவணத்தின் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அதனால் எனது தகப்பனாருக்கு சர்வே எண்.186/1 ஏ 2 பி–யில் எந்த சொத்தும் பாத்தியம் இல்லை என்றால் தெரியாது. எனது தகப்பனாருக்குதான் தெரியும் என்றால் சரிதான். எனது தகப்பனாரை விசாரித்தால் தான் அந்தவிவரம் தெரியவரும் என்றால் சரிதான். 4.2.2009 ம் தேதி எனது தகப்பனார் சர்வேஎண்.186/1 ஏ 2 பி–ல் தெற்குபுறத்தில் உள்ள 70 சென்ட் நிலத்தையும் எனக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 4.2.2009 ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் பி.வா.சா.ஆ.7 ஆகும். 20.5.2010 ம் தேதியில் எனது தகப்பனார் தென்புறம் உள்ள 70 சென்ட்டில் கீழ்புறம் 10 சென்ட் நிலத்தை மீண்டும் எனக்கு 2 வது முறையாக தானசெட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்தார் என்றால் சரிதான். 20.05.2010 ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் பி.வா.சா.ஆ.8 ஆகும். ஏற்கனவே தானசெட்டில்மெண்ட் பிறப்பித்து கொடுத்த நிலையில் எதற்காக மீண்டும் எனது தகப்பனார் பி.வா.சா.ஆ.8 ஆவணத்தை பிறப்பித்து கொடுத்தார் என்றால் சொத்துக்களை காப்பாற்றவேண்டும் என்பதற்காக கொடுத்தார். தாவா சொத்து முழுவதையும் கிரையம் செய்து கொடுத்துள்ள நிலையில் எதற்காக இந்த வழக்கை நடத்த வேண்டும் என்றால் கிரையம் செய்து கொடுத்தாலும் அனுபவம் என்வசம் தான் உள்ளது. பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் உள்ள 10 சென்ட் நிலத்தை மீண்டும் 4 வது

முறையாக வெள்ளத்தாயிடம் இருந்து 24.4.2009ம் தேதியில் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். 24.4.2009ம் தேதியிட்ட கிரைய ஆவணம் சார்பதிவாளர் அலுவலக நகல் பி.வா.சா.ஆ.9 ஆகும். அந்த 10 செனட் நிலத்தில் எனக்கது உரிமை இல்லை என்பதால் தான் வெள்ளத்தாயிடமம் இருந்து நான் மீண்டும் பி.வா.சா.ஆ.9 ஆவணம் மூலம் கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. 10 செனட் நிலத்தை நான் எந்த ஆவணத்தின் அடிப்படையில் 1ம்வாதி முத்துப்பாண்டிக்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் வெள்ளத்தாயிடம் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் மூலம் கிரையம் செய்து கொடுத்துள்ளேன். எனவே எனது தகப்பனாருக்கு தாவா 3வது அயிட்ட சொத்தில் பாத்தியம் இல்லை என்றால் அவர் தான் சொல்லவேண்டும். சர்வே எண்.186/1ஏ 2பி–ல் உள்ள 2 ஏக்கர் 10 செனடில் தென்புறம் உள்ள 70 செனட்டை பொறுத்து பட்டா மாற்றம் செய்தது தவறு என்று சாத்தூர் வட்டாட்சியரிடம் 1ம் பிரதிவாதி மனு கொடுத்தார் என்றால் சரிதான். வட்டாட்சியர் எனது பெயரில் இருந்த பட்டடாவை ரத்து செய்தார் அதன் பேரில் நான் வருவாய் கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு செய்தேன் என்றால் சரிதான். சாத்தூர் வருவாய் வட்டாட்சியர் கடந்த 22.9.2010ம் தேதியில் எனது தகப்பனார் பெயரில் இருந்த பட்டாவை ரத்து செய்து உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரிதான். பட்டாவை ரத்து செய்ததற்கான ஆவணம் பி.வா.சா.ஆ.10 ஆகும். வருவாய் கோட்டாட்சியர் எனது மேல்முறையீட்டை தள்ளுபடி செய்துவிட்டார் என்றால் சரிதான். அந்த தள்ளுபடி உத்தரவு பி.வா.சா.ஆ.11 ஆகும். அந்த தள்ளுபடி உத்தரவின் பேரில் நான் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்தேன் என்றால் சரிதான். அந்த மேல்முறையீடும் தள்ளுபடி ஆனது என்றால் சரிதான். பின்னர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் , மதுரை கிளையில் நீதிப்பேராணை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த நீதிப்பேராணையும் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் தள்ளுபடி ஆகவில்லை. நீதிப்பேராணை தள்ளுபடி ஆகிவிட்டது என்றாலும் அது தள்ளுபடி ஆகவில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விசாரித்து வந்து சொல்கிறேன். நீதிப்பேராணை என்ன நிலையில் உள்ளது என்று எனக்கு தெரியவில்லை. தென்புறம் உள்ள 70 செனட் நிலம் 1ம் பிரதிவாதி பெருமாள்சாமிக்கும் அவரது சகோதரர்களான 5 பேர்களுக்கும், அவரது தாயார் மாரியம்மாளுக்கும் பாத்தியப்பட்டது என்றால் 60 செனட் தான் அவர்களுக்கு பாத்தியம்.

10 சென்ட் நிலம் எங்களுக்கு பாத்தியப்பட்டது. எனக்கு 10 சென்ட் நிலத்தை கிரையம் கொடுத்த வெள்ளத்தாய் நான் தான் 1ம் பிரதிவாதியின் மூத்த சகோதரி என்றும், 1ம் பிரதிவாதியின் தகப்பனார் வெள்ளைச்சாமியின் மூத்த மகள் என்றும், அதனால் தன்னை வெள்ளைசாமியின் மூத்தமகள் என்று விளம்புகை செய்ய இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.29/2011 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு இதே நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது அவர்கள் தான் சொல்லவேண்டும். இந்த வழக்கில் வெள்ளத்தாயை சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் தான் கேட்கவேண்டும். வெள்ளத்தாய் தாக்கல் செய்த அ.வ.எண்.29/2011 வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றாலும் அதன் பேரில் எந்த மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். எனவே தாவா 3 அயிட்ட சொத்துக்களிலும் எனக்–கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் இந்த வழக்கை நடத்துவதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் குறிப்பாக தென்புறத்தில் உள்ள 70 சென்ட் மற்றும் அதில் கீழ்புறத்தில் உள்ள 10 சென்ட் நிலம் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் 3வது அயிட்ட சொத்தை பாதையாக பயன்படுத்துவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனக்கு அந்த பகுதியில் சொத்தே இல்லை என்றால் சரியல்ல. சொத்தே இல்லாத இடத்தில் நான் பாதை கேட்கமுடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு அருகதை இல்லை என்றாலும் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கும் எனக்கு அருகதை இல்லை என்றாலும் சரியல்ல. எனக்கும், எனது தகப்பனார் ஜெயகுருநாதனுக்கும் மற்ற வர்களின் சொத்தை அபகரிப்பதே வேலை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் உள்ளூரில் 4 ஏக்கர் சொத்தை பள்ளி கூடத்திற்கு எழுதிக்கொடுத்துள்ளார். அந்த 4 ஏக்கர் நிலம் எங்களுக்கு பாத்தியப்பட்டது கிடையாது என்றாலும் செட்டியார் வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என்றாலும் அதை நாங்கள் தான் எழுதிக்கொடுத்துள்ளோம். நான் சொல்வதெல்லாம் பொய் என்றால் சரியல்ல.